# செவ்வானம்


இலவசம் | ஆரம்பம் : புரட்டாதி 2002 | இதழ் : 21 | இலவசம்


சிறப்பிதழ்



தை - சித்திரை 2008





கல்வி, கலை, கலாசார காலாண்டு இதழ் - குருநகர் சென் ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகம்

# கல்வி நிலைமை

ஓர் சமூகத்தின் கல்வி அறிவு விருத்தியானது குறித்த பிரதேசத்தின் சமூக நிலை, வாழ்க்கைத் தரம், நாகரீக முன்னேற்றம், பொருளாதார அபிவிருத்தி நிலை, தொழில் முன்னேற்றம் போன்ற பல்வேறு அம்சங்களின் வளர்ச்சியோடு தொடர்புடையது.

குருநகர் பகுதியில் மக்களின் கல்விநிலை முன்னைய காலங்களை விட இன்று முன்னேற்றகரமானதாக காணப்படுகின்றமை அவதானிக்கத்தக்கது. இங்கு 98 சதவீதமானோர் எழுத வாசிக்க தெரிந்தோராகவே காணப்படுகின்றனர். அனேகமான குடும்பங்களில் தற்போது 50 வயதுக்கு மேற்பட்டோர் 8ம் ஆண்டு வரை கல்வி கற்றோராகக் காணப்பட்டாலும் தற்போது உள்ள இளைஞர் குடித்தொகையில் பெரும் பகுதியினர் க.பொ.த. உயர்தரம் வரை கற்றுள்ளமையைக் காணலாம்.

1995 களைத் தொடர்ந்த காலத்தில் இருந்து இன்று வரையான காலப்பகுதியில் படிப்படியான வளர்ச்சித் தன்மை காணப்படுகின்றமையை காணலாம். கடலோடும், கடற்கரையோடும் கலந்து வாழும் குருநகர் பகுதி பெரும்பான்மையாக மீன்பிடி சனத் தொகையை கொண்டமையால் அனேக குடும்பங்களில் உள்ள பிள்ளைகள் க.பொ.த. சாதாரண தரத்துடன் தம் கல்வியை இடைநிறுத்திக் கொள்ளும் நிலைமை காணப்படுகிறது. அத்துடன் கூடுதலான வசதி வாய்ப்புடையோரின் பிள்ளைகள் அதிகமாகப் படிப்பதற்கு வாய்ப்புக்கள் காணப்பட்டது. இப் பகுதியின் கல்விநிலைமை மேம்பட Gurunagar West J/71 பகுதியிலேயே அமைந்துள்ள சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலையும் (ST. James Girls School), இப்பகுதிக்கு அண்மையில் அமைந்து காணப்படும் சென் பத்திரிசியார். கல்லூரியும் (St. Patrick's College), யாழ். திருக்குடும்ப கன்னியர் பாடசாலையும் பின்னணியாகவுள்ளன.

குருநகர் பகுதியில் கல்விநிலை இன்று உயர்வாகக் காணப்பட இப் பகுதியில் கல்விக்கான ஊக்குவிப்புகள் அதிகமாகக் காணப்படுகின்றன. குறிப்பாக வெளிநாடுகளில் உள்ள இப்பகுதி மக்களால் உதவிப் பணங்கள் அனுப்பப்பட்டு பின்வரும் செயற்பாடுகள் இடம் பெறுகின்றன.

மாலை வேளைகளில் மாணவர்களுக்கான இலவச பிரத்தியேக வகுப்புகள்
மேலதிக பிரத்தியேக வகுப்புகட்கான பண உதவிகள்
க.பொ.த சாதாரண, உயர்தரங்களில் சித்தி அடையும் மாணவர்களுக்கான ஊக்குவிப்புகள் போன்ற செயற்பாடுகளை குருநகர் சென் ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகம், ஜேர்மன் சமூக சேவை அமைப்பு போன்றவை ஆற்றிவருகின்றன.


குருநகர் பிரிவில் ST. James Girls School இல் 1 - 12ம் தரம் வரையிலான வகுப்புகள் உள்ளன. இருப்பினும் G.C.E. O/L சித்திபெறும் மாணவர்கள் இப்பகுதியை அண்டியுள்ள வேறு பாடசாலைக்கு மாற்றம் பெற்று செல்லும் நிலைமைகளும் உண்டு.

1995ஆம் ஆண்டினைத் தொடர்ந்த காலங்களில் மின்சாரத்தடை, சிறந்த பிரத்தியேக கல்வி நிறுவனங்கள் இப் பகுதியில் காணப்படாமை போன்ற காரணங்களால் இப் பகுதியின் கல்வி நிலை பின்னடைந்து காணப்பட்டபோதும், 2002ம் ஆண்டினைத் தொடர்ந்த காலப்பகுதியில் சிறந்த முன்னேற்றம் காணப்படுகின்றது.


இப் பகுதியில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களினை எடுத்து நோக்கும் போது அம் மாணவர்கள் 1ம் தலைமுறையினராகவே காணப்படுவதை தரவுகள் ஆதாரப்படுத்தி நிற்கின்றன.

இப் பகுதியில் 1999 - 2002 வரை பல்கலைகழகத்திற்கு தெரிவான மாணவர்களினை வரைபடம் 1 காட்டுகிறது. (மூலம் : கல்விக்கழகம் - குருநகர் ஆண்டு அறிக்கை (1999 - 2002))

இப் பிரதேசத்தில் புலமைப் பரிசில் சித்தி எய்தும் மாணவர் தொகை குறைவடைந்து செல்கின்றமையையும் தரவுகள் காட்டுகின்றன. (வரைபடம் 2)




வரைபடம் 1




வரைபடம் 2

இப் பிரதேசத்தில் நூலக வசதியை நோக்கும்போது பிரதேசத்திற்குள் பிரதான நூலகம் அமைந்து காணப்படாமையால் அயலில் உள்ள யாழ். பொது நூலகத்தையும், சனசமூகநிலைய நூலகத்தினையும் பயன்படுத்துகின்றனர். மேலும் இப் பகுதியில் 2 சிறுவர் முன்பள்ளி கல்வி நிலையம் காணப்படுகின்றமை சிறார் கல்விக்கு வரப்பிரசாதமாகவுள்ளது.

மேலும் இப் பகுதியில் கிறீஸ்தவ மறை அறிவை வளர்க்கும் பொருட்டு இப் பகுதியில் காணப்படும் பிரதான ஆலயமாகிய புனித யாகப்பர் ஆலயத்தில் வார இறுதியில் 1 - 11 வகுப்பு மாணவர்கட்கான மறை அறிவு புகட்டப்பட்டு வருகிறது. இப் பகுதியில் மாணவர்கள் பாடசாலைக் கல்வியை முடித்து கணினி கற்கை நெறி, மின்னுபகரண திருத்தம் போன்ற தொழில் பயிற்சியிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

எவ்வாறிருப்பினும் இப் பகுதியில் G.C.E. O/L வரை கற்றதுடன் கல்வியை இடை நிறுத்தி கொள்ளும் நிலைமை இன்னும் தொடர்ந்த வண்ணமே உள்ளது. யாழ் நகரின் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும்போது இப் பகுதியின் கல்விநிலைமை மேம்பட வேண்டிய அவசியமுண்டு என்பதுடன் சனத்தொகை அதிகரித்த இப்பகுதியில் G.C.E. O/L, G.C.E. A/L, பல்கலைக்கழகம் போன்றவற்றிற்கு தெரிவாகும் மாணவர் தொகையை அதிகரிக்க வேண்டிய கடமை கல்விச் சமூகத்தைச் சார்ந்த ஒவ்வொருவரிற்கும் உரியதாகும்.

**- செல்வி லின்டா அன்ரன் செல்வக்குமார்**

## க.பொ.த.உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்
## சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை – 2007

| | |
|---|---|
| அ. ஜெயந்திமலர் | -2A,B |
| வி. ஆன் மேரி அனுசியா | -2A,C |
| கி. நிரோசா | -A,B,C |
| அ. இமாஜினி | -A,B,C |
| யோ. மெற்றில்டா | -A,B,C |
| லெ. சுதர்சினி | -A,B,C |
| ம. கமிஸ்ரா | -A,B,C |
| தா. சர்மிலா | -A,B,C |
| ஜெ. றெமிலா | -A,B,S |
| யு. சரண்யா | -A,B,S |
| இ. அனுசியா | -A,C,S |

10 வது ஆண்டு நிறைவு

# நடந்துவந்த பாதையில்...

குருநகர் சென் ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகம் தனது பணியின் பத்தாவது ஆண்டு நிறைவெய்தியதையிட்டு மனமகிழ்வடைந்து இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம். இக்கழகத்தை 1997 ஆம் ஆண்டு ஆரம்பித்து அதன் செயற்பாடுகளுக்கு வேண்டிய நிதியுதவி புரிந்து வரும் பிரான்ஸ் நாட்டில் இயங்கும் குருநகர் சென் ஜேம்ஸ் பழைய மாணவர்கள் சங்கத்திற்கு மனதார நன்றி கூறுகின்றோம். ஆரம்பகாலத்தில் இருந்து 2007ம் ஆண்டு மார்கழி வரை கழகம் அவர்களிடம் இருந்து பெற்றுக்கொண்ட பணம் 2,103,497 ரூபா 26 சதம். இப்பணம் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. முடிவடைந்த 10 ஆண்டுக்கான கொடுப்பனவுகளை தங்கள் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றோம்.

1. தரம் 3 முதல் 8 வரை மாணவர்களுக்கு கல்விக் கழகத்தால் நடாத்தப்படும் மாலை நேர கல்வி நிலையங்களுக்கான ஆசிரியர்களின் ஊக்குவிப்பு = 652,145.00
2. இரவு நேர வகுப்புகள் - ஆசிரியர்கள் ஊக்குவிப்பு பணம் (1997 - 2003), புனித யாகப்பர் மண்டபம் (1997 - 2006 July), றெக்ளமேசன் சனசமூக நிலையம் (2001 July - 2006 July), சென் ஜேம்ஸ் மகாவித்தியாலயம் பழைய மாணவர் சங்கம் (2007 Mar- 2007 Nov.) = 190,920.50
3. இரவு கல்வி கற்பதற்கு மின்சாரம் வழங்க உபகரணங்கள் பொருத்தியது (1998 Jan. புனித யாகப்பர் மண்டபம், 1998 Nov. யோசவ்வாஸ் கல்வி நிலையம், 2001 Nov. சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம்) மின்கட்டணம் குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி. = 6,578.50
4. (1997 - 2000) G. C. E. சாதாரண மாணவர்களுக்கு மீட்டற் பயிற்சியும் (2001 கழகத்தால் நடத்தப்படும் மாலை நேரவகுப்பு மாணவர்களுக்கு அப்பியாச கொப்பி வழங்கியது) =11,468.00
5. பயிற்சி வகுப்புகள் கணனி பயிற்சி, தட்டச்சு தமிழில், ஆங்கிலம் கலை, கல்விக் கழக மாணவர்களுக்கு அறிவியல் கருத்தரங்கு படக்காட்சி. = 21,884.00
6. உயர் கல்வி வறிய மாணவர்களுக்கு மாதாந்த ஊக்குவிப்பு பணம். = 76,920.00
7. G.C.E. (O/L) G.C.E. (A/L) சித்தியடைந்த மாணவர்களையும், 5ம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் கௌரவித்தல், கலை நிகழ்ச்சிகள். = 148,657.00
8. கல்விக் கழக மாணவர்களுக்கு பரீட்சைப் போட்டிகள் கலைநிகழ்ச்சி, பரிசளிப்பு. = 9609.50
9. பாடசாலை தொண்டர் ஆசிரியர் உதவி (1997 - 2005) யா. புனித சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம் 47,500.00 (1997 - 2007) யா. புனித ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம் 69, 000.00 = 116,500.00
10. புனித யாகப்பர் ஆலய பங்குதந்தை ஊடாக ஆண் பெண் இரு பிரிவாக கணனி வகுப்பு (2007 Mar. - 2007 Dec.) = 20,000.00
11. பரிசுத்த கார்மேல் மாதா இளைஞர் ஒன்றியம் G.C.E. O/L வழிகாட்டல் கருத்தரங்கு (2006 May - 2007 Nov) 5 தவணைகள் = 25,000.00
12. கழகத்தால் கல்வி கற்பிக்கும் நிலையங்களுக்கு வழங்கிய கரும்பலகை. =9,782.00
13. சனசமூக நிலையங்களுக்கு பத்திரிகை வழங்கல் (குருநகர் சனசமூக நிலையம், 38,700.00) றெக்கிளமேசன் சனசமூக நிலையம் 37,900.00). = 76,600.00
14. (1998 June 1998 December) கிறீஸ்து பிறப்பு விழா, கலைநிகழ்ச்சி பரிசளிப்பு = 19,563.02
15. கழக கல்விநிலைய மாணவர்கள் சுற்றுலா. (2002 Oct.) = 4,300.00
16. கழகத்தால் வெளியிடப்படும் செவ்வானம் பத்திரிகை. = 39,325.00
17. நிதிஉதவி : யா. புனித ஜேம்ஸ் மகா வித்தியாலயம் (1997 பரிசளிப்பு விழா, 1998 கணனி - அறை நிலவிரிப்பு, 2001- 2002 இல்ல விளையாட்டு போட்டி, 2005 மாணவர்கள் கழுத்துப்பட்டி வழங்கல், தமிழ் விழா 2006 பாடசாலை கட்டிட வேலை).= 102,200.00
18. யா. புனித ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம் 2005 அன்பளிப்பு புறஜெக்ரர், தமிழ் விழா. = 59, 000.00
19. ஆவே மரியா பாலர் பாடசாலை. = 65, 000.00
20. குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி கல்விசார் போட்டி 2004 Sep. = 19,900.00
21. பாடுமீன் விளையாட்டு கழகத்திற்கு அன்பளிப்பு (1999). = 10,000.00
22. கசிப்பு ஒழிப்பு தெருக்கூத்து விளம்பரங்கள் (1998 Oct. - 2001 Apr.). = 6,179,25
23. அன்பளிப்புகள் புத்தக வெளியீட்டு விழா, கழக ஆசிரியர்கள் திருமணம். = 11,575.00
24. அஞ்சலி நிகழ்வு மலர்வளையம். = 3,045.00
25. அலுவலகச் செலவுகள். = 48314.50
26. வருடாந்த பொதுகூட்டங்கள். = 3,741.00
27. நானாவிதச் செலவுகள். = 21,761.00
28. நத்தார், புதுவருட தினத்தையொட்டி வயோதிபர், வறியோருக்கான விசேட நிதியுதவிகள். = 302,135.00

| | |
|---|---|
| மொத்த கொடுப்பனவு | = 2,082,103.27 |
| வங்கியிருப்பு. | = 21,345.74 |
| கையிருப்பு. | = 48.25 |

எமது கழக வளர்ச்சிக்கு இதுவரை சகலவிதத்திலும் உதவிய நிர்வாக சபை உறுப்பினர்களுக்கும், அங்கத்தவர்களுக்கும் பல அர்ப்பணிப்புகளின் அடிப்படையில் தங்களது கடமையை ஆற்றிவரும் கழக ஆசிரியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்

"வளர்க கழகம் வளர்க அதன் பணி"

**அ. பீற்றர் குமார்**
(பொருளாளர்)



பிரான்ஸில் சென் ஜேம்ஸ் ப. மா. ச., பாடும் மீன் வி. க. இணைந்த, 'குருதிக் குளியல்' நூல் வெளியீடு

# கல்வி முன்னேற்றக் கழகம்

## ஒரு வழிகாட்டி...

'கல்வியே கருந்தனம்' என்ற விருதுவாக்கிற்கமைய, குருநகர் மக்களின் கல்வி வளர்ச்சியை ஊக்கப்படுத்தி, எதிர்கால சந்ததியினரை கல்வியறிவுள்ள சமுதாயமாக மாற்ற, பிரான்ஸ் நாட்டில் புலம்பெயர்ந்து வாழும் எமது ஊர் இளைஞர்களின் சிந்தனையில், *26.01.1997* அன்று புனித யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தை அருள்திரு. R.M.G. நேசநாயகம் தலைமையில் உருவாக்கப்பட்டதே சென் ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகமாகும். இக்கழகத்திற்கு அன்று தொட்டு இன்று வரை சகல வழிகளிலும் ஆதரவு வழங்கி வருபவர்வர்கள் சென் ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கம் (பிரான்ஸ்) ஆகும். எமது கழக நிர்வாகிகளின் அர்ப்பணிப்புடன் 1997ம் ஆண்டு முதல் கழகத்தின் மேம்பாட்டுச் செயற் பாடுகளாவன.

- மாலை நேர வகுப்புகளை றெக்ளமேசன் சனசமூக நிலயம், தொடர்மாடி சனசமூக நிலையம், குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி பணியகம் போன்றவற்றில் நடாத்துதல் :
- வறிய மாணவர்களுக்கு பின்னூட்டல் வகுப்புகளுக்கு உதவுதல்.
- சென் ஜேம்ஸ் மகாவித்தியாலத்திற்கும், சென் ஜேம்ஸ் பெண்கள் பாடசாலைக்கும் தொண்டர் ஆசிரியர்கள், விழாக்கள், விளையாட்டுப் போட்டி, ஏனைய கல்விச் செயற்பாடுகளுக்கு உதவுதல்.
- வருடந்தோறும் முதியோருக்கு உதவுதல்.
- குருநகர் சனசமூக நிலையம், றெக்ளமேசன் சனசமூக நிலையங்களுக்கு உதவுதல்.
- புனித யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தையால் நடாத்தப்படும் கணனி பயிற்சி வகுப்பிற்கும், க. பொ. த. (சா) பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கும், பரிசுத்த கார்மேல் மாதா ஒன்றியத்தால் நடாத்தப் படும் துரித மீட்டல் பயிற்சிகளுக்கும் உதவுதல்.
- 2002 ஆம் ஆண்டு முதல் 'செவ்வானம்' காலாண்டு சஞ்சிகை வெளியிடல்.
- கல்வி நிலையங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கலை சார்ந்த வகுப்புகளுக்கு உதவுதல்.
- விழாக்கள், கருத்தரங்கம், கௌரவிப்புகள், சிறுவர் ஒன்றுகூடல் நடாத்துதல்.
- பரீட்சார்த்திகளின் நலன் கருதி உடனுதவும் நூல்நிலையம் பணிமனையில் நடாத்துதல்.
- சமூக மறுமலர்ச்சி திட்டங்களுக்கு நிதி உதவியும் ஆதரவும் வழங்கல்.

மேற்படி செயற்பாடுகளுடன் சமூகப் பெரியோர்கள், கல்விமான்கள், நலன் விரும்பிகள், புலம் பெயர்ந்து வாழும் மக்களின் ஆலோசனை, அனுசரணையுடன் கழகம் முன்னோக்கி வளர இறைவனை வேண்டுகின்றேம்.

**C.M. நெல்சன்**
செயலளர்

ஆங்கிலத்திலேயே மிக நீளமான வார்த்தை
எது என்று தெரியுமா?
ரண்டம் ஹவுஸ் டிக்ஷனரி (Random House Dictionary)
என்ற ஆங்கில அகராதியில் காணப்படும் வார்த்தை
இதோ அந்த நீளமான வார்த்தை;

Pneumonoultramicroscopicsilicovolcanoconiosis

மொத்தம் 45 எழுத்துக்கள் கொண்ட இந்த வார்த்தை, நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை செய்பவர்களைத் தாக்கும் ஒரு நோயின் மருத்துவப் பெயராகும்.

என் அன்பான மக்களே குருநகர் என்றால் முன்பு சுகாதாரம், கலவி, மனித நேயம், கலை, கலாச்சாரம், பண்பாடு, விருந்தோம்பல், விளையாட்டு என்பவற்றில் மற்றைய சமுகங்களிலும் பார்க்க சிறந்து விளங்கியது. ஆனால் தற்போது குருநகரில் உண்மை நிலை என்ன? இதற்கு குருநகர் மக்களாகிய நாமும் குருநகரில் காணப்படும் அனைத்து பொது நிறுவனங்களும் புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் அனைவரும் என்ன செய்ய வேண்டும்? எதையும் சிந்திக்காது வாழ்ந்து வருவோமாயின் எதிர்காலம் எம்மை எள்ளி நகையாடும், அதேநேரம் எதிர்காலச் சந்ததிக்கு நாம் பெரும் துரோகம் விளைவித்தவர்களாவோம்.

குருநகர் பகுதியில் 1950 ஆண்டளவில் அரசாங்கத்தின் வீடமைப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இவ் வீடமைப்புத்திட்டம் சிறப்பான முறையில் ஒழுங்கமைக்கப்பட்டது. அவ்வேளையில் ஒழுங்கைகள், திறந்தவெளிகள், வடிகால்கள் அப்பகுதி எங்கும் காணப்பட்டது. ஐஸ் பிளான்ற் றோட்டில் இருந்து ஒழுங்கைகள் வழியாக 'உப்புமார் கந்தோர்' (தற்போது ஐந்து மாடிக் கட்டிடம்) வரை சென்றடைய முடியும். இவ்வாறு ஒழுங்காக வடிவமைக்கப்பட்ட இவ்வீடமைப்புத்திட்டம் அக்காலப்பகுதிக்கு ஒரு வரப்பிரசாதமாக இருந்தது. ஆனால் கால ஓட்டத்தில் ஒழுங்கைகள், திறந்தவெளிகள், வடிகால்கள், எல்லாம் அடைக்கப்பட்டு திட்டமிடப்படாதவாறு வீடுகளாக மாறி வந்தது. அதற்கு அப்போது குருநகர் பகுதியில் இருந்த மாநகரசபை உறுப்பினர்களும் உதவினர், யாழ் மாநகராட்சி மன்றமும் இதை தடுக்கமுன் வரவில்லை. இதனால் சுகாதார சீர்கேடுகள் ஏற்பட்டது இதற்கு சான்றாக; 1974 ஆம் ஆண்டளவில் எமது பகுதியில் தொற்று நோய் ஏற்பட்டு பல குழந்தைகள் அடுத்தடுத்து இறந்ததை குறிப்பிடலாம்.

## குருநகரே விழித்தெழு!

தற்போது ஒழுங்கைகள், திறந்தவெளிகள், வடிகால்கள் அடைக்கப்பட்டு முடிந்தநிலையில் வீதிகள் மெல்ல மெல்ல அடைக்கப்பட்டு சிறுவீதிகளாக மாறிவருகின்றது. அதுமட்டுமன்றி பெரிய வடிகால்கள்மேல் வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றது. இதனால் சுகாதாரப் பகுதியினர் அவ்வடிகால்களை சுத்திகரிக்க முடியாத நிலை தோன்றியுள்ளது. மேலும் கிணறுகளுக்கு அருகாமையிலும், வீதியோரங்களிலும் மலசலக்கூட குழிகள் அமைக்கப்படுவதால் குருநகர் பகுதியின் கிணற்றுநீர் மாசடைந்து வருகின்றது. அதுமட்டுமன்றி ஒழுங்கைகள், திறந்த வெளிகள், வீதிகள் அடைக்கப்பட்டதால் மழைநீர், கழிவு நீர் போகமுடியாத நிலை காணப்படுகின்றது. ஒருவர் இறந்தால், அல்லது நோய்வாய்ப்பட்டால் அவரை அவ்வழியால் எடுத்துச் செல்ல முடியாத நிலை பெரும்பாலான பகுதிகளில் காணப்படுகின்றது.

அதுமட்டுமன்றி எமது பகுதியில் பிறப்பு வீதம் மற்றய இடங்களிலும் பார்க்க அதிகமாகக் காணப்படுகின்றது. அத்துடன் இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயத்துக்குள் ஏறத்தாள 300 குடும்பங்களின் வீடுகள் உள்ளடக்கப்பட்டிருப்பதால் இக்குடும்பங்கள் வீடுகள் இல்லாது காணப்படுகின்றனர். எனவே ஒரு வீட்டில் நான்கு, ஐந்து குடும்பங்கள் என்று ஒரு அறைக்குள் வாழ்ந்து வருகின்றனர். இதனால் சுகாதாரசீர்கேடுகள் மட்டுமன்றி, உளரீதியான தாக்கங்கள், கலாச்சார சீரழிவுகள், தோன்றக் காரணமாகின்றது. இளைய தலைமுறையினர் என்ன செய்வதென்று தெரியாது ஒழுங்கான வழிநடத்தலின்றி, அவர்களின் சுதந்திரங்கள், பறிக்கப்படுவதால் அவர்கள் குடிபோதை, சிறுவயதுத் திருமணங்கள், கல்வியில் நாட்டமில்லாமை தோன்றக் காரணமாகிறது. இதனால் அவர்களின் எதிர்காலம் சோகமயமாகின்றது. இன்று குருநகரின் இறப்பின் வயதெல்லை 45 - 60க்கு இடையில் காணப்படுகின்றது இதற்குக் காரணம் குடிபோதையாகும்.

இன்று குருநகர் பகுதியில் காணப்படும் முக்கியமான சீரழிவு

தொடர் - பக்கம் 9

# அதீத வளர்ச்சி

– கலைபார்வன்

காணியை உழுது செப்பனிட்ட பின்னரே நடுதல் வழமையாக இருந்தபோதிலும். வசதியீனங்கள், தொடங்கி விட்ட பருவமழை, போதிய கால அவகாசமின்மை போன்ற வற்றால் உழுதலைத் தவிர்த்து புகையிலைக் கன்றுகளை நட்டுவிட்டுக் காத்திருந்தார் தணிகாசலம்.

முறைமாறிச் செய்யப்பட்ட தோட்டமென்பதால் பெரும் வருவாயை எதிர்பார்த்திருக்கவில்லை. நட்டமில்லாமல் இருந்தாலே போதும் என்ற நிலையில், ஏதாவதொரு தொழில் செய்யவேண்டுமென்ற அவாவில் தணிகாசலம் விஷப் பரீட்சையில் இறங்கியிருந்தார். ஆனால், அவர் எதிர்பார்த் ததை விட பல மடங்கு பயனைத் தருவதைப்போல் செடிகள் வளர்ச்சி கண்டமை, 'கடவுள் கொடுத்த வரம்' என்ற நம்பிக்கை அவரை ஆட்கொண்டது. தினமும் கோவிலுக்குச் சென்று நன்றி செலுத்திடத் தவறுவதில்லை.

* * *

செடிகளிலிருந்து பெற்றுகொள்ளக்கூடிய அதிஉச்சப் பயன் சுவீகரிக்கப்பட்ட பின்னர், காணி வெறிச்சோடிக் காணப்பட்டது. சிறு தண்டுகளும், அதன் உயிர்ப்பை வெளிப்படுத்தும் இளந்துளிர்களுமே புகையிலைச் செடிகளின் எச்சங்களாக காட்சியளித்தன.

ஏற்கெனவே பதப்படுத்தப்பட்டு இருப்பில் வைக்கப் பட்டுள்ள புகையிலைகளால் கிடைக்கக்கூடிய வருவாயை எண்ணியபோது தணிகாசலத்தின் உடலும், உள்ளமும் துள்ளியது. அனுதினமும் அவற்றைக் கண்காணிப்பதும், சந்தைப்படுத்துவதுமே அவரின் வேலையாக இருந்தது.

கிடைத்த நிறைவான வருவாயினால் அடுத்த செய்கையை ஆரம்பிப்பதற்கு காலம் தாழ்த்த விரும்பாமல் ஆயத்தங்களில் ஈடுபடலானார். காணியை உழாமலே கன்றுகளை நட்டபோது அவரது வாழ்வில் சந்தித்திராத வருவாயைத் கொடுத்த தென்றால் முறையாக உழுது செப்பனிட்டுக் கன்றுகளை நட்டால் மேலும் பயனைத் தருமென நம்பினார்.

* * *

உழவு இயந்திரம் காணியின் உட்பகுதியால் வட்டமடிக்க, அதில் இணைத்திருந்த கலப்பை மண்ணை ஆழமாகத் தோண்டியவாறு இழுத்துச் செல்ல, மணல் புரண்டு புரண்டு மேலெழுந்து கொண்டிருந்தன. கலப்பை மண்ணை அழுத்தித் தோண்டும்போது எழுந்த ஓசைகளையோ - வீசிய மாறுபட்ட மணத்தையோ சாரதி கவனித்ததாகத் தெரிய வில்லை. வியர்க்க வியர்க்கச் சுற்றிச் சுழன்று உழுது தனது வேலையை முடித்துக்கொண்டார்.

உழவு இயந்திரம் சென்ற பின்னர் உழுத நிலத்தைப் பார்வையிடுவதற்கென வரம்பு வழியாக சிறிது தூரம் சென்ற தணிகாசலம் மின்சாரம் தாக்கியதுபோன்ற அதிர்ச்சியில் தரித்து நின்றார்... அவர் கண்கள் அகல விரிந்தன... பயத்தால் உடல் நடுங்கியது... பதட்டத்துடன் சுற்றுமுற்றும் பார்த்தார்...

சிறிது நேரத்தில் தன் உணர்வுகளை அடக்கித் தன்னைச் சுதாகரித்துக் கொண்டவராய் வரம்பிலிருந்து உழுத மண்ணில் கால் வைத்தார். உடல் சிலிர்த்தது...

உழுத மண்ணில் உடைந்த மனித எலும்புகள்... புலால் மணம்... மேற்கொண்டு நடக்க முடியாமல் தடுமாறி நின்றார்... இதயம் வேகமாகத் துடித்தது...

'என்றோ ஒருநாள் இந்த மண்ணில் புதைக்கப்பட்ட மனித உடல்களின் எச்சங்கள்...'

நினைத்தபோது அவர் உடல் சிலிர்த்தது...

அதீத வளர்ச்சி கண்டு வெட்டப்பட்ட புகையிலைச் செடிகளின் உரமாக மனித சதைகளே இருந்துள்ளன...

தணிகாசலத்தின் கண்கள் இரத்தம் கசிவதுபோல் எரிந்தன... ■

# யா/சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம் தற்போதைய நிலை

எமது மகாவித்தியாலயத்தின் முன்பிருந்த கல்வி நிலையை நோக்கும்போது முன்னைநாள் அதிபர் அமரர் றோமான் அவர்களுக்கு சிலை வைத்ததிலிருந்து வெள்ளிடை மலையாகத் தெரிகின்றது. யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் இருந்து வருகை தந்த மாணவர்கள் ஒன்று சேர்ந்து கல்வி கற்று வந்துள்ளார்கள். இன்றும் யாழ் மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க பதவிகளில் இருந்து எமது மகாவித்தியாலயத்திற்குப் பெருமை சேர்த்து தந்துகொண்டிருக்கிறார்கள். தற்போதைய மாணவர்களின் கல்வி நிலையை நோக்கும் போது வருடாந்தம் 7 மாணவர்கள் வீதம் க. பொ. த. சாதாரணப் பரீட்சையில் சித்தியடைந்து அயற்பாடசாலைகளில் க. பொ. த உயர்தரமும் கற்று வருகிறார்கள். இவ்வருடம் செல்வன் நிசாந்தன் எனும் மாணவன் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ளமை மகிழ்ச்சிக்குரியதே. தரம் ஐந்தில் புலமைப்பரிசில் பரீட்சைக்கான ஆயத்தங்களை முழு வீச்சுடன் மேற்கொள்கின்றோம். 2005 ஆம் வருடம் செல்வன் டிலிவ் ரஞ்சன் அருந்தவராஜ் என்பவர் சித்தியடைந்தார். மேலும் 100 புள்ளிகளுக்கு மேல் அனேகமான மாணவர்கள் பெற்றிருக்கிறார்கள். ஜேர்மன் அமைப்பினரும் மாதிரிப் பரீட்சை வினாத்தாளைப் பெற்றுக்கொள்ள நிதியுதவி வழங்கி வருகிறார்கள். எனினும் பெற்றோர்களினது முழுமையான கவனிப்பு இப்பரீட்சையில் மாணவர்கள் சித்தியடைவதற்கு தேவையானது என்பது குறிப்பிடத்தக்கது. ஜேர்மன் அமைப்பினரால் O/L மாணவர்களுக்கு மேலதிக வகுப்புகள் நடாத்தப்படுகின்றது.

மெல்லக் கற்கும் மாணவர்களுக்கும், தரம் 4,5 மாணவர்களுக்கும் ஜேர்மன் அமைப்பும் தரம் 7,8,9 மாணவர்களுக்கும் வலயக் கல்வி அலுவலக முறைசாராக் கல்விப் பிரிவினரும் எழுத்தறிவூட்டல் கல்வி வகுப்புகளை நடாத்தி வருகின்றனர். அனைத்து மாணவர்களும் கழுத்துப் பட்டி அணிந்து வருவதற்கு சென் ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கம் (பிரான்ஸ்) நிதியுதவி வழங்கி உள்ளனர். 4 தொண்டர் ஆசிரியர்களுக்கு அயன்ஸ் ராஜேஷ், அயன்ஸ் கொயன்ஸ் சகோதரர்கள் மாதாந்தம் 1000/= ரூபா நிதியுதவி வழங்கி வருகிறார்கள்.

இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்காக சென் ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கம் (பிரான்ஸ்), சென் ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகத்தின் ஊடாக இல்ல விளையாட்டுப் போட்டி, தமிழ்த்தின போட்டி, ஒளி விழா ஆகியவற்றை நடத்துவதற்கான நிதியுதவிகளையும், வருடாந்த பரிசுத் தினத்தை நடாத்துவதற்காக நிதியுதவியினை ஜேர்மன் அமைப்பினரும் வழங்கிவருகிறார்கள். அத்துடன் பாடசாலையின் பௌதீக தேவைகளை நிறைவு செய்யும் முகமாக சென் ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகம் (பிரான்ஸ்), ஜேர்மன் சமூக சேவை அமைப்பு போன்றவை முன்வந்தமை பாராட்டப்பட வேண்டியவையே.

அனைத்து மாணவர்களும் கற்றலில் மிகுந்த ஈடுபாடுகொண்டு கற்று வருகிறார்கள். பெற்றோர் தம் பிள்ளைகளை கற்பித்து விடவேண்டும் என்ற முயற்சியில் எப்போதும் இல்லாதவாறு ஈடுபாடு காட்டி வருகிறார்கள். யேசு சபை அகதிப் பணி (JRS) மாலை நேர வகுப்புகளை நடாத்தி வருகின்றனர். எமது மகா வித்தியாலத்தின் கல்வியை மேம்படுத்தும் முகமாக மாணவர்களுக்கான பயிற்சிப் புத்தகங்கள் வழங்கப்பட வேண்டும். தரம் 5, 11 மாணவர்களுக்கு தனித்தனியாக புத்தகங்கள் வழங்கப்பட வேண்டும். பெற்றோர் தமது மாணவர்களின் கல்வி நிலையில் கூடிய அக்கறை கொள்ளுதல் வேண்டும். மாணவர் கல்வியை விட்டு இடைவிலகிக் கொள்ளாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

**த. ஞானப்பிரகாசம்**
அதிபர்.

22.02.2008

## 04.11.2007 இல் நடைபெற்ற 5ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்திபெற்ற குருநகர் மாணவர்கள்



**பி. றெ. ஜெயக்குமார் மைக்கல் வினுசன்**
புள்ளி: 167
(டொண் பொஸ்கோ)

2, ஓடைக்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.



**கிங்ஸ்ரன் ரமேஸ் இவோன் ஷாமி**
புள்ளி: 159
(டொண் பொஸ்கோ)

320, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.



**கிறிஸ்ரியன் பிரியங்கா**
புள்ளி: 159
(டொண்பொஸ்கோ)

41, புதிய பூங்கா வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.



**ஸ்ரீபன் வேஜின் பிளேயர்**
புள்ளி: 154
(புனித பத்திரிசியார் கல்லூரி)

16/7, மத்திய கிழக்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.




**பேர்ட்டி பனிஸ்ரர் நிலோஜன்**
புள்ளி: 154
(புனித பத்திரிசியார் கல்லூரி)

132, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.



**கயித்தாம்பிள்ளை இன்பறூபன்**
புள்ளி: 144
(யாழ். மத்திய கல்லூரி)

1/10, த.தா.வீதி, 1ம் ஒழுங்கை,
குருநகர், யாழ்ப்பாணம்.



**அன்ரன் பேனாட் அன்ரனி நோயல்**
புள்ளி: 144
(புனித பத்திரிசியார் கல்லூரி)

13, தண்ணீர்த்தாங்கி வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.



**பெனாண்டோ நிறஞ்சன் யோண் மில்ரன்**
புள்ளி: 144
(புனித பத்திரிசியார் கல்லூரி)

9/10, த. தா. வீதி, 4ம் ஒழுங்கை
குருநகர், யாழ்ப்பாணம்.







கார்மேல் மாதா சபையினரால் நடத்தப்பட்ட 'ஒளி விழா' வில் கல்வி முன்னேற்றக் கழக மாணவிகள் - 30.12.2005

## மாணவர்களின் கல்வி நிலைமை

குருநகர் சென் ஜேம்ஸ் கல்வி முன்னேற்ற கழகத்தினால் நடத்தப்படும் கல்வி நிலையங்களில் குருநகர் ஐக்கிய முன்னணியும் ஒரு பிரிவாகக் காணப்படுகின்றது. 1997ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக் கல்வி நிலையத்தில் 1997 - 2000 ஆண்டு வரை 83 மாணவர்கள் கல்வி கற்றனர். 2000ம் ஆண்டு தொடக்கம் 2008ம் ஆண்டு வரை சராசரி 72 பிள்ளைகள் வருகின்றனர்.

பிள்ளைகளின் கல்வி நிலையை பொறுத்த வரையில் படிப்பில் கெட்டித்தனமுள்ளவர்களும், அதேவேளை குறைவானவர்களும் உள்ளனர். அதற்கு ஏற்ற வகையில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் எமது ஆசிரியர்களால் கல்வி வழங்கப்பட்டு மேன்மேலும் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றனர். ஆரம்பத்தில் இம் மாணவர்களின் துப்பரவு, பழக்கவழக்கங்கள், ஒழுங்கின்மையை கருத்திற்கொண்டு கண்டிப்புடன் இன்று வரை படிப்படியாக அவர்களின் பழக்கவழக்கங்கள் மாற்றப்பட்டு ஒழுங்காக வழிநடத்தப்பட்டு வருகின்றனர்.

மேலும் ஒரு கல்வி நிலையத்தைப் பொறுத்தவரையில் ஆண்டுகள் செல்லச் செல்ல மாணவர்களின் தொகை அதிகரித்துச் செல்லவேண்டும். ஆயினும் குருநகரில் பல கல்வி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டமையால் மாணவர்களின் தொகை கிட்டத்தட்ட அதே அளவில் உள்ளமை குறிப்பிடத்தக்கது எனினும் பெற்றோர்கள் கவனம் எடுத்தால் இம்மாணவர்கள் மேலும் வளர்ச்சி அடையலாம் என்பது எமது கருத்தாகும். மேலும் எமது குருநகர் மாணவர்கள் முன்னேற உதவி புரிகின்ற பிரான்ஸ் கழகத்தினருக்கு எமது நன்றிகளைத் தெரிவித்து கொள்கின்றோம்.

**வில்பிறட் யூனியா**
*(ஐக்கிய முன்னணி ஆசிரியர்)*

'செவ்வானம்' இலவச இதழில் பிரசுரிக்கக்கூடிய ஆக்கங்களை – தகவல்களை, நீங்கள் எழுதி அனுப்பவேண்டிய முகவரி

ஆசிரியர் 'செவ்வானம்'
பணிமனை,
சென் ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகம்
அடப்பன் விதி, 1ம் ஒழுங்கை,
குருநகர், யாழ்ப்பாணம்.

## இன்றைய நிலையில்
## யா/சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை

சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை ஆரம்பத்தில் க. பொ. த. சாதாரண வகுப்பு வரையே இருந்து வந்தது. 1999 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 14 ஆம் திகதி A/L ஆரம்பமாகியது. படிப்படியாக எமது மாணவர்கள் O/L பரீட்சையில் சித்தியடையும் வீதம் அதிகரிக்கவே. எமது முன்னைய அதிபர் திரு. S. S. தங்கராஜாவின் அயராத முயற்சியினால் எமது பாடசாலையில் உயர்தர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களின் அடைவு வீதம் தொடர்ந்து 100% உள்ளது. பல்கலைக்கழகம், கல்வியற் கல்லூரிகளுக்கு எமது மாணவர் வருடாந்தம் செல்கின்றமை எமது பாடசாலைக்குப் பெருமையாகும்.

மேலும் எமது மாணவர்களின் கணனி அறிவை மேம்படுத்த விரும்பியபோது திரு. செ. யேசுராசா (அமெரிக்கா) கணனி ஒன்றை அன்பளிப்பு செய்தார். தொடர்ந்து எமது பழைய மாணவி ஒருவராலும், நன்கொடையாளியாலும் கணனி அன்பளிப்பு செய்யப்பட்டு எமது மாணவர்களின் கணனி அறிவு உயர்த்தப்பட்டுள்ளது.

எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு ஆசிரியர் பற்றாக் குறையாக இருந்த காலங்களிலிருந்து இன்று வரை எமக்கு பிரான்ஸ் கல்விக் கழகம், மனவல் பபியன் குடும்பத்தினர் தொண்டர் ஆசிரியர்களுக்கு வேதனமும் ஏனைய உதவிகளும் வழங்கியும், விளையாட்டுப் போட்டி, தமிழ்த் தினவிழா, ஒளிவிழா போன்ற நிகழ்வுகளுக்கும் நலன் விரும்பிகள் நிதி உதவி செய்து வருகின்றனர். ஜேர்மன் கழகத்தின் உதவியால் O/L மாணவர்களுக்கான மேலதிக வகுப்புக்கள் தொடர்ந்து நடாத்தப்பட்டு வருகின்றன. தற்போது தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களது மேலதிக வகுப்பிற்கான செலவை நோர்வே அமைப்பினர் வழங்கியும், எமது முடிக்கப்படாத மாடி கட்டட வேலையை முடித்தும் தருவதற்கான நிதியையும் ஒதுக்கியுமுள்ளனர்.

இவ்வாறு பாடசாலை மாணவர்கள் எமது மக்களின் ஒத்துழைப்பாலும், அதிபர் - ஆசிரியர்களின் அயராத உழைப்பினாலும் முன்னேறி வருகின்றனர்.

**திருமதி லு. மகேஸ்வரன்**
அதிபர்.



யாழ். திருமறைக் கலாமன்றம் நடத்திய 'கலைவிழா' அரங்கில் கல்வி முன்னேற்றக் கழக மாணவிகள் - 02.10.2005

## அருவருப்பு

"பாத்தியாடி அவளட புள்ளைக்கு வந்த வாழ்வை. வெளிநாட்டில கலியாணமாம்!"

சொன்னவளின் முகம் எரிச்சலுடன் கூடி விகாரமாக காட்சியளிக்கின்றது.

"என்னடி உன்னட்டையும் வெள்ளைத் தோலும் இடுப்புக்கு கீழ மயிருமாக இருந்தால் உன்னட்டையும் கேப்பாங்க."

"அதுக்கில்லையடி சீதனமும் வேணாமாம், நகை நட்டும் வேணாமாம், காணி.பூமியும் வேணாமாம்"

அவளின் கறுத்த முகம் பேய்மாதிரி தோற்ற மளிக்கிறது.

"அது சரியடி வெளிநாட்டில சரியான குளிராமே? றோட்டெல்லாம் பனிக்கட்டியாய் இருக்க சறுக்கி விழுந்து இடுப்புடைந்து கை, கால்கள் கூட முறியுமாமே? எப்படித்தான் இதுகள் போய் சமாளிக்கப் போகுதுகளோ?"

"குளிரில விறைத்துச் சாகட்டும். கை, கால் முறிந்து நாசமாகப் போகட்டும்."

அடக்க முடியாத ஆத்திரத்துடன் மண்ணை அள்ளி வீசி சாபமிடுகிறாள்.

"நமக்கென்னடி போறவளாச்சு; அனுப்பிறவளாச்சு, எடுக்கிறவனாச்சு."

* * *

வெளிநாட்டிலிருந்து மாப்பிள்ளை அனுப்பிய காசு கிடைத்தவுடன் சுறுசுறுப்பாகிய அக்குடும்பம் ஒருவழியாக 'கிளியரன்ஸ்' எடுத்துக் கொண்டு கொழும்புக்கு விரைகிறது. மணமகனின் பெற்றோரும் இணைந்து கொள்கின்றனர்.

## இது கதையல்ல...

கொழும்பில் பாஸ்போட் அலுவல் முடிய 'எம்பசிக்கான' பிரயாணம் தொடர்கிறது. 'ஐஸ்வர்யா' லொட்ஜ் வாசம், கட்டுச்சோறு, கொழும்பு தண்ணீரில் முழுக்கு. இடையிடையே மாப்பிள்ளையோடு ரெலிபோன் உரையாடல். மணப்பெண் இப்ப இன்னும் நிறமாகிவிட்டாள்.

2006ம் ஆண்டு 2007ம் ஆண்டாகி 2008ம் ஆண்டின் நடுப்பகுதியில்...

விஸா கிடைத்துவிட்டது.

இன்று இரவு 12.00 மணிக்கு பிளைட். சிறீலங்கன் எயார் லைன்ஸில் புறப்படுவதாக மணமகனுக்கு ரெலிபோனில் தகவல்...

விம்மல்... அழுகை. விமானம் புறப்படும் இரைச்சல்.

* * *

வெளிநாடொன்றின் எயார்போட்.

ஆயிரமாயிரம் எதிர்பார்ப்புக்களுடன் 'வின்ரர்' காலத்துக் கான குளிரைத் தாங்கிக் கொள்ளக்கூடிய ஆடைகளுடன் அவள் இறங்கி மிரள மிரள விழித்தபடி வெளியே வர...

மணமகனின் கையசைப்பில் அவனை நோக்கி நகர்கிறாள்.

இவள் அவனை நெருங்க அவனுக்குப் பக்கத்தில் ஒட்டியவாறு அவன் கையைப் பிடித்தபடி நின்ற சிறுவன்...

"டடா... இவங்க யாரு?" ○

**S.N.J. மரியாம்பிள்ளை**

# அறியப்படாதவர்கள் நினைவாக...!

மரித்தோரின் நாள்:
கல்லறைத் திருநாள்!
விரிந்து கிடக்கின்ற சவக் காலைக்கதவுகள்
வந்து போனபடி, பெரிய சனக்கூட்டம்.

கல்லறைகள் எழுந்துள்ளன;
வாழ்ந்து சொகுசாக
மறைந்துபோனவரின்,
நினைவைக் கல்லுகளில்
வரைந்த அடையாளம்.
பூவெழுத்தில் விபரங்கள்,
'சிலுவை' 'சம்மனசு'
'கன்னிமரியாளா'ய்ச்
சுரூபங்கள்;
கூலிக்குழைத்த
மேசன் தொழிலாளர் கைவண்ணம்!

தென்கிழக்கு மூலை,
வரிசையாய்க் கல்லறைகள்:
'சங்கைக் குரிய கன்னியர்கள் தந்தையர்கள்'
படுத்துக் கிடக்கிறாராம்;
பளிங்கில் அவர்நினைவு
பொறிக்கப் பட்டுளன!

கிணற்றருகில்,
தென்னை மரத்தடியில்,
பட்டிப்பூ மலர்ந்துள்ள
சிப்பிச் சிலுவை
மேடுகளின்கீழெல்லாம்
மனிதர் புதைபட்ட அடையாளம்;
பேரும் தெரியாது

ஊரும் தெரியாது,
யாரென்றும் அறியப்
படாத மனிதர்கள் இங்கு புதைந்துமுளார்.

யாரென் றறியப் படாதவரென்றாலும்,
அவரைக் குறிப்பாக
உணர முடியுந்தான்...!

'ஒரு கரை'யில் நின்றபடி
கரைவலையை இழுத்தவர்கள்;
தாமிழுத்தமீனில் சம்மாட்டி கொழுத்திருக்க
மெலிந்து கருவாடாய்க் காய்ந்து மடிந்தவர்கள்...

'அலுப்பாந்தி' அருகில்
மூட்டை சுமந்தவர்கள்; பார விறகுவைச்சு
கைவண்டில் இழுத்தவர்கள்...

பொழுது புலராத விடி காலை தொடங்கியதும்
நகரை ஊடறுத்த வீதிகளின் வீடுகளில்,
நாளும் அழுக்குகளைக் களைந்து சுமந்தவர்கள்...

என்ற உழைப்பாளர் தாம்புதைந்து கிடப்பார்கள்!

செத்துப் புதைபட்டுக்
கிடந்த மண்மீதும்
எல்லைகட்டி,
கல்லறையாய் மேடுகளாய்
வர்க்கத்தின் முத்திரைகள்
வர்க்கத்தின் முத்திரைகள்...!


– அ. யேசுராசா
- 27.12.1973

# பதில் தருக...!

என்னவளே..!
எங்கே சென்றுவிட்டாய்?
அழுகின்றேன் நாளும் - உன்
அன்பைப் பெற.
அலைகின்றேன் பொழுதும் - உன்
தரிசனம் பெற.

காத்திருந்த கணங்கள்
ஒவ்வொன்றும்
கரைந்து ... கலைந்து
போனது என் ராசாத்தியே.
எங்கே - நீ
சென்றுவிட்டாய்?

ஏனடி இந்த
திரு விளையாடல்
ஏமாற்றல் தேவைதான்
ஏழைக்கே ஏமாற்றமா
தாங்காதம்மா - இந்த
சின்ன மனது...



என்ன நீ
நினைத்து விட்டாய்
முடியாது வாழவென்றா?
இல்லையடி என்னவளே.
இழக்கின்றேன் நாளும்
உன்னை.

திறந்து வா - உன்
சிறைக் கதவை
உடைத்தெறி - எம்
அடிமை விலங்கை.
தா எங்களுக்கு
சுதந்திரத்தை.

தமிழ் தாயே...
ஏனம்மா இன்னும்
உறக்கம்
அழைக்கின்றோம் - உன்னை
அவசரமாய் வந்திடம்மா
அடியவர் வாழ்க்கை - இங்கு
அலங்கோலமாகுதம்மா.
வா தாயே... வா

விழிப்புடன்
சகோதரன் சூசை

(குருநகரே...)
வீதியோரங்கள், சந்திகள், ஒழுங்கைகள் என்று இல்லாமல் காசுக்கு சீட்டாட்டம் நடைபெறுகின்றது. இது காலை தொடக்கம் இரவுவரை நடைபெறுகின்றது. இதில் சிறுவர், பெரியோர், இளையோர் என்று இல்லாமல் ஈடுபடுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இது எதிர்காலத்தில் பாரதூரமான விளைவை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

எமது குருநகரின் கல்வியை நோக்கினால் முன்பைவிட எமது மக்களின் கல்விநிலை உயர்ந்திருந்தாலும் சனத்தொகை அதிகரிப்புக்கேற்ப அதிகரிக்கப்படவில்லை என்றே கூறவேண்டும். இங்கு கல்வி கற்போரில் ஆண்களிலும் பார்க்க பெண்களே கூடுதலாகக் காணப்படுகின்றனர். இவ்வாறு கல்விகற்ற பெண்கள் G.C.E. O/L படித்ததும் திருமணமென்ற பந்தத்துக்குள்ளாகின்றனர். சிலர் G.C.E. A/L இருந்தும், பல்கலைக்கழகம் போவதற்கு தகுதிபெற்றும் பல்கலைக்கழகக் கல்வியை முடித்து வேலை வாய்ப்பைப் பெறாது திருமணம் செய்வதால் கற்ற கல்வி பயன்படாது போகின்றது.

எமது குருநகர் மக்களின் சில பிள்ளைகள் யாழ்நகரில் காணப்படும் பிரபல்யமான கல்லூரிகளில் கல்விகற்க வாய்ப்புக்கள் கிடைத்துள்ளது. சென் பற்றிக்ஸ் கல்லூரி, யாழ் மத்தியகல்லூரி, சென் ஜோண்ஸ் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, திருக்குடும்ப மகளிர் கல்லூரி போன்றவையாகும். இதில் கல்வி கற்கும் எம் மாணவர்கள், கல்வியிலும், விளையாட்டிலும் சிறந்து விளங்குகின்றனர். ஆனால் இவ் வாய்ப்புக்கள் கிடையாத பெருமபாலான மாணவ, மாணவிகள் சென்ஜேம்ஸ் மகா வித்தியாலத்திலும், சென் ஜேம்ஸ் பெண்கள் பாடசாலையிலும் கல்வி கற்று வருகின்றனர். இவர்களில் பெருமபாலானோர் கல்வியைத் தொடர்ந்து கற்காது வருடாந்தம் ஏறத்தாள 30 மாணவர்கள் இடைவிலகுகின்றனர். இவர்கள் தொடர்பாக அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் முயற்சிகள் எடுத்து இவர்களின் பெற்றோரிடம் கதைத்தும் இம்முயற்சி வெற்றியளிக்கவில்லை. இதற்கு அவர்களைத் தொடர்ந்து படிப்பிக்க பெற்றோரிடம் போதிய வருமானம் இல்லை என்று குறிப்பிடப்படுகிறது. இவ்வாது இடைவிலகும் மாணவர்கள் பெரும்பாலும் 7, 8ம் வகுப்புப் படிக்கும் மாணவர்களாக இருக்கிறனர். இதனால் கல்வியற்ற சமுகம் ஒன்று எதிர்காலத்தில் உருவாகுவதற்கு இது வழிவகுக்கின்றது.

விளையாட்டுத்துறையைப் பொறுத்தவரையில் எமது குருநகர் இளைஞர்கள் சளைத்தவர்கள் அல்ல. ஆனால் உதைப்பந்தாட்டத்தை மட்டும் விளையாட்டுத்துறையாக எடுத்துக் கொள்ளாமல், துடுப்பாட்டம், உள்வாரியான விளையாட்டுக்கள் (INTERO GAMES), கரப்பந்தாட்டம், மெய்வல்லுனர் போட்டிகள் என்பவற்றிலும் நாம் பயிற்சி அளிக்கவேண்டும்.

யாழ் நகரில் இருக்கும் சிறிய பாடசாலைகள் இன்று துடுப்பாட்டத்தை ஆரம்பித்துள்ளது. 12, 13, 15, 17, வயதுக்கு குறைந்தோர் என பாடசாலைகளுக்குக்கிடையிலான போட்டிகள் நடைபெறுகின்றது. இன்று பிரபல்யமான கல்லூரிகளில் உதைப்பந்தாட்டம், துடுப்பாட்டம் மெய்வல்லுனர் போட்டி, என்பவற்றில் குருநகரைச் சேர்ந்த மாணவர்களே முக்கியம் பெறும்போது சென் ஜேம்ஸ் மகாவித்தியாலய மாணவர்கள், இவ்விளையாட்டில் சிறப்பாக செயல்படுவர். ஆனால் இவர்களுக்கு வழிகாட்டல்களும், உதவிகளும் வழங்கப்படவேண்டும்.

இத்தகைய நிலைமை குருநகரில் காணப்படுகின்றபோது இவற்றை தீர்ப்பதற்காக எத்தனையோ பொது அமைப்புகள் முயற்சித்தும் பயனளிக்காது போய்விட்டது. இது குருநகருக்கு ஏற்பட்ட ஒரு மாபெரும் பொதுப் பிரச்சனையாகும். எனவே எந்தவிதமான கருத்து வேறுபாடுகளுமின்றி, சுயலாபம் கருதாது இப்பிரச்சனைகளைத் தீர்க்க அனைவரும் ஒன்றித்து முன்வரவேண்டும் இதற்கு உறுதுணையாக வெளிநாடுகளில் இருக்கும் அனைத்து குருநகர் மக்களும், அமைப்புகளும் தேவையான ஆலோசனைகளையும், நிறைவான ஆதரவுகளையும் தரவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

**அ.அகஸ்ரின்**
*(தலைவர்)*

# சூழல் மாசடைதல்

இன்று உலகளாவிய ரீதியில் சுற்றுப்புறச் சூழலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகின்றது. ஏனெனில் மனிதன் புதிய சக்திகளை விரைவாக அறிமுகப்படுத்தவதன் மூலம் சூழல் அவனது கட்டுப்பாட்டில் இருந்து விலகிச் செல்கின்றது. இதன் விளைவாக இயற்கை சூழல் பல வழிகளில் மாசடைந்து வருகின்றது. மண், நீர், வளி ஆகியவற்றின் பௌதிக, இரசாயன, உயிரின தன்மைகளில் ஏற்படும் வேண்டத்தகாத மாற்றமே சூழல் மாசடைதல் ஆகும். சூழல் மாசடைவதால் சூழல் பண்பிலும், இயற்கையிலும் ஏற்படும் மாற்றத்தை மனிதன் மதிப்பீடு செய்வதற்கு முன்னரே அவை அவன் மீது பாதக விளைவுகளை ஏற்படுத்தி விடுகின்றது.

இத்தகைய சூழல் மாசடைதலானது குருநகர் பிரதேச சூழலில் ஏற்படுத்தி வரும் தாக்கத்தை நோக்குகையில் இப் பிரதேசமானது உயர்வான மக்கள் அடர்த்தியையும், சிக்கலானதும் செறிவானதுமான நிலப்பயன்பாட்டைக் கொண்ட ஒரு தனித்துவமான புவியியல் பிரதேசமாகும். இங்கு நிலப்பற்றாக்குறை காரணமாக கடற்கரையோரங்களில் நிலமீட்சி இடம் பெற்றுள்ளது. நிலமீட்சி மூலம் பெறப்படும் நிலம் மேலதிக குடித்தொகைக்கு இருப்பிடமாக அமைகின்றபோதும் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வனவாக இல்லை.

இவற்றுடன் இப் பிரதேச சூழல் மாசடைவிற்கு அதிக சனத்தொகை, பற்றாக்குறையான நிலப்பரப்பு, திட்டமிடப்படாத வகையில் அமைந்த குடியிருப்புக்களின் தோற்றம், போதிய வருமானம் இன்மை, கல்வியறிவு இன்மை, சூழல் பற்றிய விழிப்புணர்வு இன்மை போன்ற பல்வேறு காரணிகள் காரணமாகின்றன.

குடியிருப்பாளர்களால் வெளியேற்றப்படும் வீட்டுக் கழிவுகள், சமையலறைக் கழிவுகள், திரவக் கழிவுகள், வர்த்தகக் கழிவுகள் என்பனவே சூழலை மாசுபடுத்துகின்றன. இப் பிரதேச வடிகால் அமைப்புக்கள் சிறியனவாகவும், சீரற்று காணப்படுவதனாலும் கழிவுகளை சிறப்பாக வெளியேற்ற முடிவதில்லை. யாழ். மாநகர சபையினரின் கழிவகற்றல் செயற்பாடு இடம் பெறுகின்ற போதிலும் அவை திருப்திகரமானதாக இல்லை.

இவ்வாறான சூழல் மாசடைதலினால் மனித சுகாதாரம் பாதிக்கப்படல், அவனது பொருளாதார உற்பத்தி திறன் குறைவடைதல், அவர்களது சமூக நலன் வசதிகள் என்பன இழக்கப்படல் போன்ற பிரச்சினைகள் உருவாகுகின்றன. குருநகர் பகுதியில் நுளம்பு, ஈ என்பவற்றின் பெருக்கம், நிலவளத்தேய்வு, தரைக்கீழ் நீர்வளம் மாசடைதல், துர்நாற்றம் வீசுதல், நோய்க் காவிகளின் பரவல், இயற்கை அழகு கெடுதல் போன்ற பிரச்சினைகளை இனம் காணமுடிகின்றது.

இப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானது. இயற்கைச் சூழலின் தரமே மனிதனின் வாழ்க்கைத் தரத்தினையும் உயர்த்தும். எனவே குருநகர் பிரதேசத்தில் இது பற்றிய விழிப்புணர்வு அவசியம். அதிகரிக்கும் குடித்தொகையைக் கட்டுப்படுத்துவதன் மூலம்தான் குடியிருப்பு பற்றாக்குறையை நீக்க முடியும். அத்துடன் மேலதிக குடித்தொகையினை நெருக்கமற்ற பகுதிகளில் குடிபெயரச் செய்யவேண்டும்.

இப் பிரதேசத மக்களின் வருமானம், தொழில் நிலை, கல்வியறிவு என்பன அதிகரிக்கப்படும் போது சூழல் பற்றிய விழிப்புணர்வும் அதிகரிக்கும். அத்துடன் பாடசாலை, சமூகம், நிறுவனங்கள் என்ற ரீதியில் இவை தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். மக்களின் ஆரோக்கியத்துக்கும் பல்வேறு தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

சுற்றுச் சூழல் மாசடைவதனால் ஏற்படும் அபாயங்களும் நெருக்கடிகளும் குறிப்பிட்ட ஒரு சிலரை மட்டுமே தாக்கும் நமக்கென்ன என்ற மனப்பாங்கினைவிடுத்து சூழல் மாசடைவதால் நானும் எனது குடும்பமும், சமுதாயமும் பாதிக்கப்படுகிறது என்பதை உணர்ந்து ஒவ்வொருவரும் சேர்ந்து செயற்படும்போது எமது பிரதேச அபிவிருத்தியினையும் சூழலின் தரத்தையும் பேண முடியும்.

**– எ. நிமலதர்சினி**

# குருநகர் மக்களுக்கு...

**நாட்டின் அசாதாரண சூழ்நிலையினால் நிறுத்தப்பட்ட அற்ஹோம் கொண்டாட்டத்தை சிலர் முறைமாறிச் செய்கின்றமை அறியப்பட்டதால் அதனைக் கட்டுப்படுத்தும் விதத்தில் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரத்தின் பின் பகுதியை இங்கே தருகின்றோம்.**

... பொது மக்களாகிய உங்களுக்கும் பெரும் கடமைகள் இருக்கின்றது என்பதை மறவாதீர்கள். தெருவில் நின்று குறை கதைப்பதாலோ, எதையும் மற்றவர் செய்யவேண்டுமென்று எதிர்பார்ப்பதாலோ, மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்துகொள்வதாலோ எதுவும் நிகழப்போவதில்லை. நீங்களும் பங்காளராகவேண்டும். இவை உங்கள் நன்மைக்காகவே செய்யப்படுகின்றது என்பதை மனத்தில் கொள்ளவேண்டும். இதனில் சமூகசேவை அமைப்புகளும், நலன் விரும்பிகளும் பொதுநோக்கோடு முன்வரவேண்டும். குறித்த ஒருசிலர்தான் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தை மாற்றிக்கொள்ளுங்கள் சமூகத்தின் நன்மைக்கு, முன்னேற்றத்திற்கு எவரேனும் முன்வந்து செயற்படலாம். 'சுனாமி' ஏற்பட்டபோது துடித்த இதயங்கள், தாமாக முன்வந்து உதவிய கரங்கள் உங்கள் மக்களின் நலனையும் கருத்திற்கொள்ளவேண்டும். கடந்தவைகளை விடுத்து மேற்கொண்டு செயற்பட முன்வாருங்கள். நீங்கள் செய்யவேண்டியது இவைதான்:


1. பிள்ளைகளின் கல்விக்கு முன்னுரிமை கொடுங்கள். அவர்களை சிறந்த அறிவாளியாக உருவாக்குங்கள். அதன் பயனை இப்போது அல்ல சில காலத்தின் பின்னர்தான் உணர முடியும். எனவே கல்வி கற்கும் பிள்ளைகளின் எதிர்கால நலனையும், அயலவர்களின் நலனையும் கருத்திற்கொண்டு மாலை 6.30 மணிக்குப் பின்னர் ஒலிபெருக்கி பயன்படுத்துவதை நிறுத்திக் கொள்ளுங்கள். (வீடியோ மற்றும் தேனீர்க் கடைகள் உட்பட)
2. உங்கள் பிள்ளைகள் குறித்த நேரத்திற்குள் வீட்டிற்கு வந்து படிப்பதை அவதானியுங்கள்.
3. ஐஸ்கிறீம் விற்பனை செய்யவரும் வாகனங்கள் 6.30 மணிக்கு பின்னர் பாடல்கள் ஒலிபரப்புவதை கண்டால் அதனை நிறுத்திக்கொள்ளுமாறு அன்பாகத் தெரியப் படுத்துங்கள்.
4. உங்கள் எல்லோரினதும் நன்மை கருதி அற்ஹோம் கொண்டாட்டங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகளை எவரேனும் மீறுவதாக உணர்ந்தால் அதனை நிறுத்த ஆலோசனை வழங்குங்கள். அதையும் மீறும் பட்சத்தில் அனைவரும் அந்தக் கொண்டாட்டத்தைப் புறக்கணிப்பு செய்ய முன்வாருங்கள்.

**குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி**
*24.03.2008*

*பரீட்சை எழுதப் போகுமுன்...*

கடினமான முயற்சி வெற்றி தரும்...
நம்பிக்கை வெற்றி தரும்...
தொடர்ந்து போராடினால் வெற்றி கிடைக்கும்...
இது போதுமா...?
உங்களுக்கு ஏற்ற விதத்திற் சரியான முறையில் சிந்தித்துச் செயற்பட்டால் வெற்றி உங்கள் பக்கமே !!!

# குருநகரில் புனித வார சிறப்பு நிகழ்வுகள்



புனித கார்மேல் அன்னை ஆலயத்தில் மூன்று சகாப்தத்திற்கு முன்னர் நடைபெற்ற உடக்கு பாஸிற்கு உபயோகிக்கப்பட்ட உடக்குகளில் பல மீளுருவாக்கம் செய்யப்பட்டு இவ்வருடம் மீண்டும் உறங்குநிலைக் காட்சியாக காண்பிக்கப்பட்டது. 18ம் திகதி தொடக்கம் 21ம் திகதி வரை நடைபெற்ற இவ்வுறங்குநிலைக் காட்சிப் படுத்தலில்; இயேசுவின் பாடுகள் - மரணங்களை தியானிக்கும் முகமாக பூங்காவனம், செனற்சபை, பிலாத்துவின் அரண்மனை, இயேசுவின் கல்லறை, யூதாசின் மரணம் சம்பந்தமான காட்சிகள் வடிவமைக்கப்பட்டு காட்சிப்படுத்தப் பட்டிருந்தன. மேலும் 8ஆம் பிரசங்கம் வாசிக்கப்பட்டு மரியாளின் இதயத்தில் ஏழு வாட்கள் ஊடுருவும் காட்சி இயக்கிக் காண்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்திலும் வழமைபோன்று வழிபாட்டுமயமாக்கப்பட்டு நடைபெற்று வந்த இயேசு சிலுவையில் மரணிக்கும் காட்சி புனித வெள்ளியன்று 8ம் பிரசங்கத்துடன் காட்சிப்படுத்தப்பட்டது. 8ஆம் பிரசங்கத்தில் உள்ளடக்கப்படும் இயேசுவின் உடல் வேதனை, அவரது இறுதி வார்த்தைகள், மரியாளின் வேதனையை வெளிப்படுத்தும் ஏழு வாட்கள் ஊடுருவல் போன்றவை காண்பிக்கப்பட்டன. பின்னர் மரணித்த இயேசுவின் உடல் இறக்கப்பட்டு, ஆசந்தியில் வைக்கப்பட்டு வழிபாட்டிற்காக ஆலயத்தினுள் கொண்டுசெல்லப்பட்டது. மழை அச்சுறுத்தல் இருந்தபோதும் திரளான மக்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.



# தகவல்கள்

## 2007 இல் ஒளி விழாக்கள்

### சென் ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகம் :

மேற்படி கழகத்தினால் நடத்தப்படும் கல்விநிலையங்களான குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி, தொடர்மாடி, றெக்ளிமேசன் ஆகிய நிலையங்களில் முறையே மார்கழி 14, 18, 19 ஆகிய திகதிகளில் நடைபெற்றன. இவ்விழாக்களில் கு.மு.ஐ.முன்னணி மற்றும் றெக்ளிமேசன் மாணவர்களால் தனித்தனியே நடனங்களும், நாடகங்களும் நிகழ்த்தப்பட்டு சிறப்பாக நடைபெற்றது. முடிவில் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

### சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம்:

சென். ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகம் (பிரான்ஸ்) பழைய மாணவர் சங்க அனுசரணையுடன் மார்கழி 6 ஆம் திகதி பல நிகழ்ச்சிகளுடன் கூடிய ஒளி விழா நடைபெற்றது. இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக அருள்திரு ஆர். எச். சகாயநாயகம், சிறப்பு விருந்தினராக கு. செ. ஜே. க. மு. கழக உபதலைவர் அ. யேசுதாசன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

### சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை:

மார்கழி 6 ஆம் திகதி அதிபர் திருமதி லு. மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற ஒளி விழாவில் பிரதம விருந்தினராக அருள்திரு ஜெ. பி. அன்ரனி அவர்களும், சிறப்பு விருந்தினராக திரு. மரியதாஸ் மற்றும், பி. ஆனந்தி ஆகியோர் பங்குபற்றினர். இந்நிகழ்வினை சிறுவர்களின் பாடல், குழு நடனம் போன்றன சிறப்பூட்டி நின்றன.

### கார்மேல் மண்டபம்:

கார்மேல் இளைஞர் அமைப்பினரால் மார்கழி 28 ஆம் திகதி பல கலை நிகழ்வுகளுடனும், சிறந்த நாடகத்துடனும் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட ஒளி விழாவில் பிரதம விருந்தினராக அருள்திரு. அ. யோ. ஜெயசீலன் அடிகளாரும், சிறப்பு விருந்தினராக சென். ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை அதிபர் திருமதி லு. மகேஸ்வரன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

## கண்காட்சி

குருநகர் சனசமூக நிலைய முன்பள்ளி மாணவர்களால் பாலர் அபிவிருத்தி கைவினைத் திறன் கண்காட்சி 05.12.2007 அன்று குருநகர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக கியூடெக் நிறுவன இயக்குநர் அருள்பணி கி. யே. ஜெயக்குமார் அவர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தார். இக்கண்காட்சியில் ஆசிரியர், பெற்றோரின் ஆக்கங்கள் இடம்பெற்றமை குறிப்பிடத் தக்கது. காலம்சென்ற முன்பள்ளி ஆசிரியர் திருமதி ஜான்சன் யஸ்மலர் அவர்களின் உருவப்படம் திறந்துவைக்கப்பட்டது.

## மெய்வல்லுனர் போட்டிகள்

சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை மாணவர்களின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி 02.02.2008 அன்று அதிபர் திருமதி லு. மகேஸ்வரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இப்போட்டியில் பிரதம விருந்தினராக யாழ். பிரதேச செயலர் திரு. மரியதாஸ் ஜெகு அவர்கள் பங்குபற்றிச் சிறப்பித்தார்.

01.03.2008 இல் அதிபர் திரு. த. ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற சென் ஜேம்ஸ் மகா வித்தியாலய மாணவர்களது மெய்வல்லுனர் போட்டியில் பிரதம விருந்தினராக யாழ். கோட்ட மறைமாவட்ட முதல்வர் அருள்கலாநிதி மைக்கல் சௌந்தரநாயகம் அடிகளார் மற்றும், சிறப்பு விருந்தினராக 'கலாபூஷணம்' ஜி. பி. பேர்மினஸ் திருமதி எச். பிரான்சீஸ் ஆகியோர் சமூகமளித்திருந்தனர். சிறப்பாக நடைபெற்ற இம் மெய்வல்லுனர் போட்டிக்கு, குருநகர் சென் ஜேம்ஸ் கல்விக் கழகம் சார்பில் திரு. கு. பீலிக்ஸ் அனுசரணை வழங்கியிருந்தார்.

## அன்பிய எழுச்சி வாரம்

24.02.2008 முதல் 02.03.2008 வரை குருநகர் பங்கில் அன்பிய எழுச்சி வாரம் நடைபெற்றது. இவ்வாரத்தில் இல்லத் தரிசிப்புக்கள், கருத்தமர்வுகள், சிலுவைப்பாதை, கண்காட்சி, கலைநிகழ்ச்சி போன்றவை நிகழ்த்தப்பட்டன. 01.03.2008 அன்று யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருள்திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில், குருநகர் கலையரங்கில் நடைபெற்ற கலைநிகழ்ச்சியில் பொம்மலாட்டம் மற்றும், வில்லிசை சிறப்பான நிகழ்ச்சிகளாக அமைந்திருந்தன. நிறைவில் படக்காட்சியும் காண்பிக்கப்பட்டது.

## பாராட்டு விழாக்கள்

வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சினால், 2006 ஆண்டின் சிறந்த பல்துறை நூலாக 'கலையார்வன்' கு. இராயப்புவின் 'கடலலைகள் கொஞ்சும் நகர்' என்னும் நூல் தேர்வுசெய்யப்பட்டு 28.10.2007 இல் பரிசில் வழங்கப்பட்டது. இதனைச் சிறப்பிக்கும் முகமாக, இந் நூலின் வெளியீட்டு நிறுவனமான 'நெயோ கல்சரல் கவுன்சில்'ன் ஏற்பாட்டில், பிரதேச செயலர் திரு. மரியதாஸ் ஜெகு அவர்கள் தலைமையில், 11.11.2008 அன்று பாராட்டு விழா நடைபெற்றது. பிரதம விருந்தினராக 'செங்கை ஆழியான்' க. குணராசா அவர்கள் கலந்துகொண்டார். இவ்விழாவில் நூலாசிரியர் கௌரவிக்கப்பட்டார்.

இலங்கை கலாசார அமைச்சினால் கலைத்துறைக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டும் முகமாக நாடகத் துறைக்கான 'கலாபூஷணம்' விருது 15.12.2007 இல் திரு. வி. யே. கொன்ஸ்ரன்ரைன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதனைப் பாராட்டும் முகமாக குருநகர் இளைஞர் கலைக்கழகத்தினால் 13.01.2008 இல் நடத்தப்பட்ட பாராட்டு விழாவிற்கு பிரதேச செயலர் திரு. மரியதாஸ் ஜெகு அவர்கள் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக அரச அதிபர் திரு. கே. கணேஷ் அவர்கள் கலந்து சிறப்பித்தார்கள். இந்நிகழ்வில் 'கலாபூஷணம்' வி. யே. கொன்ஸ்ரன்ரைன் கௌரவிக்கப்பட்டார்.

## நூல் வெளியீட்டு விழா

குருநகர் சென்ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கமும், குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகமும் இணைந்து, 10.02.2008 அன்று, பிரான்ஸ் - பரீஸ் நகரில், 'கலையார்வனி'ன் 'குருதிக் குளியல்' என்னும் நூல் வெளியீடு செய்யப்பட்டது. திரு. டேமியன் சூரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ் வெளியீட்டு விழாவில் அறிமுக உரையை திருமதி மெரிசியா சீலனும் வெளியீட்டுரையை செல்வி டொறத்தி யேசுநாயகமும் நிகழ்த்த, ஆய்வுகளை திரு. மா. நாகேஷ், திரு. எ. ஜோய் ஆகியோர் நிகழ்த்தினர். கவிஞர் வண்ணைத் தெய்வம் கருத்துரை வழங்கினார். விழாவில் சபையோர் கருத்துகள் கோரப்பட்டிருந்தமை புதியதொரு முயற்சியாகும்.

இவ்வெளியீட்டு விழா பற்றிய தகவல்களை பிரான்ஸ் தமிழ்ப் பத்திரிகைகள் முன்னுரிமை கொடுத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பசான் வாசிப்புப் போட்டி

குருநகர் பங்கில் இயங்கும் திரு இருதய சபையினரால் தவக்காலத்தை முன்னிட்டு கடந்த 09.03.2008 அன்று பசான் வாசிப்புப் போட்டி நடத்தப்பட்டது. இப்போட்டிகள் யாழ் மறைமாவட்ட பங்குகளில் உள்ளவர்கள் கலந்துகொள்வதற்கு ஏதுவாகவும், குருநகர் பங்கில் உள்ளவர்கள் கலந்து கொள்வதற்கு ஏதுவாகவும் தனித்தனி போட்டிகளாக நடைபெற்றன.

# குருநகர் சென். யேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகம்

ஆதரவு

## சென் யேம்ஸ் பழைய மாணவர் சங்கம் (பிரான்ஸ்)

**5வது ஆண்டு நிறைவு விழாவும்,**

**5 ஆம் ஆண்டு புலமைப்பரீட்சை, க.பொ.த. சாதாரண மற்றும், உயர்தர மாணவர்களின் கௌரவிப்பும்**




2 0 0 2






### கழகக் கீதம்

எந்தையே இறையே என்று
ஏற்றியே புகழ்ந்து நின்றோம்
வந்தனை செய்தோம் நின்னை
வழங்கியே உந்தன் ஆசி

கல்வியில் சிறந்து ஓங்க
கருத்தினில் நிறுத்துகின்றோம்
கருணையே தருவாய் - என்றும்
கருதியே இறைஞ்சுகின்றோம்

சிந்தனையில் நினைத்து நின்று
சீருடன் வாழ்ந்திடுவோம்
பண்பால் உயர நாமும்
பாதமலர் பணிவோம்



## இன்னொரு காத்திருப்புக்காக...!

உன்னை முதல் முதல் பார்த்த போது
என்னிடம் இல்லை என் மனம் - ஏனோ
புரியவில்லை இரவைக்கூட
கழிக்க மறுக்கிறது என் விழிகள் - நான்
உன்னை பார்க்க மறுக்கிறேன் - ஆனால்
நீயோ உன் வழியென்னும் அன்பு கொண்டு
காதல் கோலம் இடுகின்றாய் - காத்திரு என
மனதில் ஏற்றுக் கொள்கின்றேன் - உன்
விழியால் ஏற்படும் என் மரண வலியை
மீண்டும் நாளை காண்பாய் என்று காலை
மாலை என்று பாராமல் பயணம் செய்கின்றது
என் விழிகள்!

பேருந்து சேரும் இடம் அறியாமல்
என் கனவெல்லாம் உன் பிம்பத்தை தீட்டுகின்றது
என் இதயம் இயங்கத் துடிக்கிறது
உன் பார்வையால்;
ஏன் ஏற்க மறுக்கின்றாய்? என் காதலை
நீ மறுத்து விட்டால் மடிந்து விடும்
வாழ்க்கை
இன்னொரு காத்திருப்புக்கு இடங்கொடாமல்.

-குருகுலப்பாரதி

## சென் ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகம்

### நடப்பு வருட

### செயலவை உறுப்பினர்கள்

| | |
|---|---|
| தலைவர் : | திரு. அ. அகஸ்ரின் |
| செயலாளர் : | திரு. கி. மா. நெல்சன் |
| பொருளாளர் : | திரு. அ. பீற்றர்குமார். |
| உபதலைவர் : | திரு. அ. யேசுதாசன் |
| உபசெயலாளர்: | திரு. ம. குயின்ரன் |
| நிர்வாகிகள் : | திரு. ச. டோமினிக் |
| | திரு. செ. அன்ரன் |
| | திரு. அ. யேசுதாசன் (யேசு) |
| | திரு. ம. கியூமன் |
| | திரு. அ. பி. மகேந்திரன் |
| | திருமதி செல்வநாயகி (மலர்) |
| பரிசோதகர் : | திரு. அ. ஜேம்ஸ் மேசன் |

குருநகர் சென் ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகத்தின் (ஆதரவு: சென் ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கம் - பிரான்ஸ்) சார்பாக, ஆசிரியர் சி. எம். நெல்சன் அவர்களால், இல. 28 மாட்டின் வீதியிலுள்ள 'ஜெயந்த் சென்ரர்' இல் வடிவமைக்கப்பட்டு ஏ.சி.எம். அச்சகத்தில் அச்சிடப்பட்டது.